10.2.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கறவை மாடு பராமரிப்புப் பயிற்சி

கறவை மாடுகளை சுகாதாரமான முறையில் பராமரிப்பது மற்றும் மேலாண்மை குறித்த பயிற்சி முகாம் கலித்தீர்த்தாள் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. புதுவை ஆத்மா திட்டத்தின் கீழ்,மதகடிப்பட்டுப் பண்ணை தகவல் மற்றும் ஆலோசனை மையம் சார்பில் நடைபெற்ற இம்முகாமில், ஆத்மா திட்ட தொழில்நுட்பக் குழு அமைப்பாளர் ஜோதி கணேசன் வரவேற்றார். திட்ட இயக்குனர் ரவிப்பிரகாசம் முகாமின் முக்கியத்துவம் குறித்தும், மதகடிப்பட்டு பயிற்சி வழி தொடர்புத் திட்ட துணை வேளாண் இயக்குநர் முத்துக்கிருஷ்ணன் பண்ணைப் பள்ளியின் முக்கியத்துவம் பற்றியும் பேசினர். கால்நடை மருத்துவர் பிரீத்தா, சுத்தமான பால் உற்பத்தி செய்வது குறித்து செயல் விளக்கம் அளித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வமுத்து, கால்நடை பராமரிப்பில், சரியான முறை குறித்து விளக்கிக் கூறினார். மதகடிப்பட்டு கால்நடை மருத்துவர் துளசிராமன் சிறப்புரை ஆற்றினார். இதில் பங்கேற்ற விவசாயிகளுக்கு இலவச முதலுதவிப் பெட்டி மற்றும் கால்நடை பராமரிப்பு பற்றிய கையேடு வழங்கப்பட்டது. கலிதீர்த்தாள் குப்பம் கால்நடை குழு தலைவர் வள்ளி, தனக்கோட்டி ஆகியோர் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் குமரன் நன்றி கூறினார்.

### கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்

பெங்களூருவில் பிப்ரவரி 23-ஆம் தேதி முதல் கோழி வளர்ப்பு முகாம் நடத்தப்படுகிறது. இதுகுறித்து மாநில கோழி இனப்பெருக்கம், பயிற்சி

மையம் வெளியிட்ட செய்தி: மாநில கோழி இனப்பெருக்கம், பயிற்சி மையத்தின் சார்பில், பெங்களூரு, ஹெசரகட்டாவில் உள்ள அலுவலகத்தில் கோழி வளர்ப்பு பயிற்சி முகாம் பிப்ரவரி 23 முதல் 28-ஆம் தேதி வரை 6 நாள்களுக்கு நடைபெறவிருக்கிறது. இந்தப் பயிற்சி முகாமில் பங்கேற்க விரும்புவோர் துணை இயக்குநர், தேசிய ஒருங்கிணைந்த கோழி இனப்பெருக்கத் திட்டம், மாநில கோழிப் பண்ணை, ஹெசரகட்டா, பெங்களூரு-560089 என்ற முகவரி அல்லது 080-28466093 என்ற தொலைபேசியில் அணுகலாம் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## புரதச்சத்து குறை போக்க வருகிறது 'வனராஜா'; புதிய கோழி ரகம் கோவையில் அறிமுகம்

கோவை: கிராம மக்களிடையே நிலவும், புரத குறைபாடுகளுக்கு தீர்வு காணும் வகையில், அதிக முட்டையிடும் திறனுடைய கோழி ரகங்கள், கோவையில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. ஐதராபாத்தில் உள்ள கோழி திட்ட இயக்குனரகம், 'கிராமப்பிரியா' (முட்டை ரகம்), 'வனராஜா' (முட்டை மற்றும் இறைச்சி ரகம்) எனும் இரு கோழி ரகங்களை உருவாக்கியது. பார்ப்பதற்கு நாட்டுக்கோழிகளை போன்ற தோற்றமுடைய இக்கோழிகள், நாட்டுக்கோழிகளை விட அதிக எண்ணிக்கையில் முட்டையிடக் கூடியவை.முதலில் இக்குஞ்சுகள், தடுப்பூசிகள் மற்றும் உரிய தீவனங்களுடன், அடைக்காப்பானில் ஆறு வார கால தொடர் செயற்கை வெப்பத்தில் பராமரிக்கப்படுகின்றன. பின்னர், புறக்கடை வளர்ப்புக்கு ஈடுபடுத்தப்படுவதால், கோழிகளே

தங்களுக்கான உணவு தேவையை, எளிதில் பூர்த்தி செய்து கொள்கின்றன. இதன் மூலம், அதிக எடையையும், அதிக முட்டையிடும் திறனையும் கோழி பெறுகிறது.அதாவது, 1.5 ஆண்டில் 'கிராமப்பிரியா' ரக கோழி, 200 முதல், 230 முட்டைகளும், 'வனராஜா' ரக கோழி, 100 முதல் 110 முட்டைகளும் கொடுக்கிறது. கோழிகளின் எடையும் அதிகம் என்பதால், 2.2 கிலோ வரை இறைச்சியும் கொடுக்க வல்லது. இவ்வகை கோழிகளை வளர்க்க, குறைந்த முதலீடே போதும். இதனால், கோழி விதை திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு வழங்க, கோவை கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஈடுபட்டுள்ளது. கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இணை பேராசிரியர் சிவக்குமார் கூறியதாவது: புரதச்சத்து அதிகமுள்ள முட்டையை, சீராக எடுத்துக்கொள்ளாததால், இன்று பல கிராமங்களில் கர்ப்பிணிகளும், வளரும் குழந்தைகளும் புரத பற்றாக்குறையால் அவதிப்படுகின்றனர். இதற்கான சிறந்த தீர்வாக, 'கிராமப்பிரியா', 'வனராஜா' கோழி ரகங்கள் அமையும்.மக்கள் பயன்பெறும் வகையில், இந்த கோழிக்குஞ்சுகளை விவசாயிகளுக்கு அளிக்க முடிவு செய்துள்ளோம். கோவை மண்டலத்திற்குட்பட்ட ஈரோடு, சேலம், நீலகிரி, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் கோவை, கால்நடை பயிற்சி மையத்தில், இதற்கான முன்பதிவை செய்து கொள்ளலாம். கூடுதல் தகவலுக்கு, 0422 - 266 9965 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, பேராசிரியர் சிவக்குமார் கூறினார்.

## <u>உளுந்து பயிரில் அதிக மகசூல்டி.ஏ.பி., கரைசல் தெளியுங்கள்</u>

தஞ்சாவூர்: "உளுந்து பயிரில், 25 சதவீதம் கூடுதல் மகசூல் பெற, டி.ஏ.பி., கரைசல் தெளிக்க வேண்டுமென,' தஞ்சை மாவட்ட சேதுபாவாசத்திரம் வட்டார வேளண்மை உதவி இயக்குனர் பெரியசாமி விவசாயிகளுக்கு யோசனை தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் சாகுபடி செய்யப் பட்டுள்ள

உளுந்து பயிரில், 25 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெற, 2 சதம் டி.ஏ.பி., கரைசல் தெளிப்பது அவசியமாகும். ஒரு ஏக்கருக்கு தேவையான, 4 கிலோ டி.ஏ.பி., உரத்தை நன்கு தூள் செய்து, 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாளே ஊறவைத்து நன்கு கலக்கிவிட வேண்டும்.மறுநாள் தெளிந்த கரைசலை மட்டும் வடிகட்டி எடுத்து, அத்துடன், 190 லிட்டர் தண்ணீர் சேர்த்து, மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.மேலும், 35வது நாள் பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 45வது நாள் காய் பிடிக்கும் தருணத்தில், ஒரு முறையும் கரைசல் தயாரித்து, 2 முறை தெளிக்க வேண்டும்.இதனால், ஒரு ஏக்கரில், 25 முதல், 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கிறது. எனவே உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகள், டி.ஏ.பி., கரைசல் தெளித்து பயன்பெறலாம்.

## <u>குறைந்த செலவில் அதிக லாபம் தரும் சூரியகாந்தி</u>

திருத்தணி: விவசாயிகளுக்கு, குறைந்த செலவில் அதிக லாபம் தரும் சூரியகாந்தி பயிரிடுவதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். திருத்தணி ஒன்றியத்தில், போதிய பருவ மழை இல்லாததால், விவசாய கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. இதனால், தண்ணீர் அதிகம் தேவைப்படாத சூரியகாந்தியை அதிகளவில் விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர். சூரியகாந்தி பயிரிடுவதற்கு, வேளாண் துறை மூலம் இலவச விதைகள் வழங்கி, பயிரிடும் முறைகள் குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி அளித்துள்ளனர். இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: மழை இல்லாததால், விவசாயிகள் சூரியகாந்தி பயிரிட்டால், குறைந்த செலவில் அதிக லாபம் பெறலாம். அதாவது, ஒரு ஏக்கர் சூரியகாந்தி பயிரிட்டால், அதற்கு ஒரு முறை களை எடுத்தல், ஒரு முறை உரம் இடுதல், மாதத்திற்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சுதல் போதும். இதற்கு, அதிகபட்சமாக, 10 ஆயிரம்

ரூபாய் தான் செலவாகும். 90 - 100 நாட்கள் கழித்து அறுவடை செய்தால், ஒரு ஏக்கருக்கு, 15 மூட்டை விதைகள் கிடைக்கும். அதாவது, 30 ஆயிரம் ரூபாய் அளவுக்கு வருவாய் கிடைக்கும். தற்போது, திருத்தணி ஒன்றியத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட கிராமங்களில், விவசாயிகள் ஆர்வத்துடன் பயிரிட்டு உள்ளனர். இவ்வாறு, அவர் கூறினார்.

## ரூ.94 லட்சம் மதிப்பில்வேளாண் பொருட்கள் ஏலம்

அந்தியூர்:அந்தியூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்துக்கு, நேற்று, அத்தாணி, கோபி, பருவாச்சி, எண்ணமங்கலம், புதுப்பாளையம் உட்பட பல இடங்களில் இருந்து, தேங்காய், எள், நிலக்கடலை, மக்காச்சோளம், பாசிப்பயிறு, துவரை, நிலக்கடலை மற்றும் பருத்தி ஆகிய விளை பொருட்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். மொத்தம், 15 ஆயிரம் தேங்காய், குறைந்த விலையாக, 5.50க்கும், அதிக விலையாக, 17.50 ரூபாய் என, 1.5 லட்சம் ரூபாய்க்கும், கொப்பரை தேங்காய், 60 மூட்டைகள், குறைந்த பட்ச விலையாக, 87.69 முதல், 93.18 ரூபாய் வரை, 1 லட்சம் ரூபாய்க்கும், சிவப்பு ரக எள், 5 மூட்டைகள், கிலோ ஒன்று, 52.69 முதல், 64.89 ரூபாய் என, 25 ஆயிரம் ரூபாய்க்கும், மக்காச்சோளம், 70 மூட்டைகள் கிலோ, 11.39 முதல், 11.70 ரூபாய் வரை, 75 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.கடந்த புதன் கிழமை நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 120 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தது. காய்ந்தது, 26.55 முதல், 31 ரூபாய் வரை, ஒரு லட்சம் ரூபாய்க்கும், 5 மூட்டை ஆமணக்கு, கிலோ, 39.80 முதல், 42 ரூபாய் வரை, 10 ஆயிரம் ரூபாய்க்கும், பாசிப்பயிறு, 20 மூட்டைகள், 71.17 முதல், 84.69 ரூபாய் வரை, 90 ஆயிரத்துக்கும், நரிப்பயறு 100 மூட்டைகள், 45.36 முதல், 53.50 ரூபாய் வரை, 5 லட்சத்துக்கும், துவரை, 1,200 மூட்டைகள் குறைந்த விலையாக, 49.90 ரூபாய்க்கும் அதிக விலையாக, 53.89 ரூபாய்க்கும் விற்பனையாகி, 65 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.கடந்த,

வியாழக்கிழமை நடந்த பருத்தி ஏலத்துக்கு, பிடி ரக பருத்தி, 1,500 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு, குறைந்த விலையாக கிலோ ஒன்றுக்கு, 37 முதல், 38.50 ரூபாய் வரை, 18 லட்சத்துக்கு என மொத்தம், 94 லட்சம் ரூபாய்க்கு, வேளாண் பொருட்கள் வர்த்தகம் நடந்தது, என விற்பனைக் கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

**அன்னாச்சி பழம் வரத்துஅதிகரிப்பு: சாலை ஓரத்தில் குவித்து விற்பனை**

சத்தியமங்கலம்:அன்னாச்சி பழத்தின் விலையும், வரத்தும் அதிகரித்துள்ளதால், கேரளா வியாபாரிகள் சாலையோரத்தில் விற்பனைக்காக குவித்து வைத்துள்ளனர்.ஒவ்வொரு காலத்துக்கும் ஏற்றவாறு, ஒவ்வொரு பழங்களை, இயற்கை நமக்கு வழங்குகிறது. இதில் பலாப்பழம், மாம்பழம், அன்னாச்சி பழம் போன்றவைகள் முக்கியதுவம் பெற்றதாகும். அந்த வகையில் ,தற்போது அன்னாச்சி பழம் சீசன் துவங்கி உள்ளது.சீசன் சமயத்தில் விற்கப்படும் பழங்கள், ஆங்காங்கே தனிக்கடைகள் அமைத்து விற்பனை செய்யப்படுவது வழக்கம். பழக்கடைகளில், அப்போதைய சீசன் பழத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து விற்பனை செய்வர். தற்போது, அனைத்து பழக்கடைகளிலும் குவித்து வைத்திருப்பதில், முக்கிய இடம் பெறுவது, அன்னாச்சி பழம் ஆகும்.பழமுதிர் நிலையங்களில், தற்போது அன்னாச்சி பழம் ஒரு கிலோ, 30 முதல், 50 ரூபாய் வரையிலான விலையில் விற்பனை செய்கின்றனர். இதே பழம், கடந்த மாதம் ஒரு கிலோ, 80 ரூபாய்க்கு விற்பனையானது. அன்னாச்சி பழம் சீசன் துவங்கியதால், தற்போது சத்தியமங்கலம் பகுதியில், கேரளா அன்னாச்சி பழம் வரத்து அதிகரித்துள்ளது. சத்தியமங்கலத்தில் இருந்து கோவை செல்லும் ரோட்டின் ஓரத்தில், அன்னாச்சி பழத்தை கேரளா வியாபாரிகள் குவித்து வைத்துள்ளனர். சாலையோர கடைகளில், ஒரு கிலோ அன்னாச்சி பழம், பழமுதிர்சோலை விலையை காட்டிலும், பத்து ரூபாய் குறைத்து, 30 முதல், 40 ரூபாய்க்கு

விற்பனை செய்யப்படுகிறது. இதனால், வாடிக்கையாளர்கள், கடைகளை விட சாலையோரத்தில் விற்கப்படும் அன்னாச்சி பழங்களை, அதிகமாக வாங்கி செல்கின்றனர்.

## கெந்தொரை கிராமத்தில் கோதுமை அறுவடை செய்யும் பணி ஜரூர்

ஊட்டி : ஊட்டி அருகே, கெந்தொரை கிராமத்தில் கோதுமை அறுவடை செய்யும் பணியில் கிராம பெண்கள் ஈடுபட்டுள்ளனர். நீலகிரியில், பிரதானமாக பயிரிடப்படும் தேயிலைக்கு அடுத்தப்படியாக, கொய் மலர், காய்கறி சாகுபடி செய்யப்படுகிறது. தவிர, பல இடங்களில், கோதுமை சாகுபடியும் மேற்கொள்ளப்படுகிறது. ஆண்டுதோறும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் கோதுமை விதைப்பு நடக்கிறது. அதன்பின், சாண உரத்தை மட்டுமே பயன்படுத்தி மூன்று மாதங்கள் மிகவும் கண் காணிப்புடன் இதனை வளர்க்கின்றனர். மலை காய்கறி விளை விக்கும் பூமியில், கோதுமை உட்பட சில தானிய வகைகளையும் இவர்கள் வளர்த்து வருகின்றனர்.இந்நிலையில், ஊட்டி அருகேவுள்ள கெந்தொரை கிராமத்தில் அறுவடைக்கு தயாராக உள்ள கோதுமையை அறுவடை செய்யும் பணிகள் நடந்து வருகின்றன. இதனை அறுவடை செய்து, தானிய கிடங்கில் வைக்கும் பணிகளில் கிராம பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர்.கெந்தொரை கிராம விவசாயிகள் கூறுகையில்,"நீலகிரியில், படுகரின மக்கள் வாழும் பல கிராமங்களில்,கோதுமை பரம்பரையாக விளைவிக்கப்பட்டு வருகிறது. எங்கள் கிராமங்களில், பல பெரியவர்கள் இன்றளவும் நல்ல உடல் வாகுடன் நோயின்றி வாழ்ந்து வருவதற்கு, இவ்வகை இயற்கை உணவுகள் மட்டுமே பக்க பலமாக உள்ளன' என்றனர்.

## சொட்டு நீர் பாசனத்திற்கு மானியம்; தேனி மாவட்டத்திற்கு ரூ. 4 கோடி

கம்பம் : தேனி மாவட்டத்திற்கு சொட்டு நீர் பாசனம் மானியத்தில் வழங்க ரூ. 4 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத்துறை

அறிவித்துள்ளது. மானியம் பெற விரும்பும் விவசாயிகள் பிப்., 15 க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் திராட்சை, மா, கொய்யா, வாழை, தென்னை உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்கள் அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயம் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியில் நீர் மேலாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது. நீர் மேலாண்மையில் முக்கிய பங்கு வகிப்பது சொட்டுநீர் பாசன முறையாகும். சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் மானியம் வழங்கி வருகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம், பிற விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியம் வழங்கப் படுகிறது. விவசாயிகளை ஊக்குவிக்க வழங்கப்படும் இந்த மானியம் 2014-15 ம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. தோட்டக் கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: மத்திய அரசின் தேசிய நிலையான வளர்ச்சி இயக்கம் சார்பில் தேனி மாவட்டத்திற்கு சொட்டு நீர் பாசன மானியத்திற் கென ரூ. 4 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, வாழை, காய்கறி பயிர்கள் மற்றும் விவசாய பயிர்களுக்கு வழங்கப்படும். அரசு அங்கீகாரம் பெற்றுள்ள 12 சொட்டுநீர் கம்பெனி களில் விவசாயிகள் தங்களுக்கு விருப்பமான கம்பெனியை தேர்ந் தெடுக்கலாம். ஆன்லைனில் விண்ணப்பத்தை பதிவு செய்யலாம். பிப்., 15 க்குள் விண்ணப்பிக்கவேண்டும். மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதியில் உள்ள தோட்டக்கலை மற்றும் விவசாய உதவி இயக்குனர்களை தொடர்பு கொள்ளலாம், என்றனர்.

## ரூ. 1.40 கோடிக்கு பருத்தி வர்த்தகம்

ராசிபுரம்: நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, ஒரு கோடியே, 40 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள

குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 8,596 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,779, குறைந்தபட்சமாக, 4,289 ரூபாய், சுரபி ரகம் அதிக பட்சமாக, 6,469, குறைந்த பட்சமாக, 6,100 ரூபாய். ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,301, குறைந்த பட்சமாக, 3,729 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக ஒரு கோடியே, 40 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

# தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முட்டை விலை 10 காசுகள் அதிகரிப்பு**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. முட்டைபண்ணை கொள்முதல் விலையில் என்இசிசி நேற்று மாற்றம் செய்தது. முட்டை விலையில் 10 காசுகள் உயர்த்தி, ஒரு முட்டை யின் விலை 290 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. பிற மண்டலங் களில் முட்டை விலை உயர்ந்து வருவதால் அதை பின்பற்றி நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த வாரம் 15 காசுகள் குறைக்கப்பட்ட நிலையில் ஒரே நாளில் முட்டை விலையில் 10

காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.48 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.61 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சென்னை மண்டலத்தில் முட்டை விலை 315 காசுகளாக உள்ளது.

## <u>மலையடிவார விவசாயிகள் பப்பாளி பயிரிடுவதில் ஆர்வம்</u>

சின்னசேலம், : கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ள கல்பொடை, பொட்டியம், மாயம்பாடி, பரங்கிநத்தம் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள் மருத்துவ குணம் நிறைந்த பப்பாளி பயிரிடுவதில் ஆர்வமாக உள்ளனர். இந்த கிராமங்களில் சுமார் 28 ஏக்கர் நிலத்தில் விவசாயிகள் பப்பாளி செடி நட்டு, பராமரித்து வருகின்றனர். செடி நட்ட 6 மாதத்தில் காய்காய்த்து, பழம் பழுக்க ஆரம்பிக்கும். அவ்வாறு பழுத்த பழங்களை சேகரித்து, ஒசூர், சென்னை, கேரளா போன்ற பெருநகரங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். கோடை காலமாக இருந்த போதிலும், இந்த பயிருக்கு அதிக தண்ணீர் தேவையில்லை. அதை போல பராமரிப்பு செலவும் குறைவாகும். அதனால் விவசாயிகள் விரும்பி பயிர் செய் கின்றனர். பப்பாளி பழம், அதன் இலைகள் மருத்துவ குணம் நிறைந்த செடியாகும். இது குறித்து விவசாயிகள் கூறும்போது, வேளாண்மைத் துறையும், தோட்டக்கலைத்துறையும் எங்களை ஊக்கு வித்தால், தகுந்த ஆலோசனையுடன், மானியமும் வழங்கினால் இன்னும் அதிக அளவில் பயிர் செய்வோம், என்றனர்.

## <u>மாவட்டம் முழுவதும் நவரை நெல் சாகுபடி தீவிரம்</u>

ஈரோடு, : பவானிசாகர் அணையில் இருந்து ஆண்டுதோறும் கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்காக ஆகஸ்ட் 15ம் தேதி முதல் டிசம்பர் இறுதி வரை நன்செய் பாசனத்துக்குட்பட்ட 1 லட்சத்து 3500 ஏக்கர் நிலங் களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. நன்செய் பாசன காலத்தின் போது சுமார் 60 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சம்பா நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

இதுதவிர கொடிவேரி பாசனத்துக்குட்பட்ட தடப்பள்ளி, அரக்கன் கோட்டை பாசன பகுதியில் சுமார் 15 ஆயிரம் ஏக்கரிலும், காலிங்கராயன் பாசனத்துக்குட்பட்ட பகுதியில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் பரப்பில் குறுவை மற்றும் சம்பா நெல் சாகுபடி நடைபெறும். தற்போது குறுவை, சம்பா நெல் சாகுபடி முடிவடைந்துள்ள நிலையில் சம்பாவில் விளைந்த நெற்பயிரை அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் கீழ்பவானி வாய்க்காலில் 1 லட்சத்து 3500 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசனம் பெறும் வகையில் இரண்டாம் போக சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் நிலக்கடலை, மக்காச்சோளம், எள், ஆமணக்கு, துவரை, அவரை, தக்காளி, சோளம், ராகி, கம்பு போன்ற பயிர்களை சாகுபடி செய்வதற்காக வே புன்செய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. இருப்பினும், சில இடங்களில் நீர்வரத்து தடையின்றி உள்ள இடங்களில் கிடைக்கும் நீரை கொண்டு நவரை நெல் சாகுபடியில் ஈடுபடுகின்றனர். அதன்படி தற்போது கீழ்பவானி பாசனத்துக்குட்பட்ட சில இடங்களில் தொட்டம்பாளையம், பெரியூர், உக்கரம், குருமந்தூர், அளுக்குளி, காஞ்சிகோவில், கவுந்தப்பாடி, நசியனூர், சென்னிமலை, முகாமி அனுமன்பள்ளி, இராட்டைசுற்றிபாளையம், வெள்ளோடு, எழுமாத்தூர் போன்ற பகுதிகளில் நவரை நெல் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்த நவரை நெல் சாகுபடி விவசாயிகள் கூறியதாவது: கடந்த 2011ம் ஆண்டுக்கு பிறகு கடும் வறட்சி காரணமாக பவானிசாகர் அணையில் இருந்து புன்செய் பாசன காலமான ஜனவரி முதல் ஏப்ரல் 30ம் தேதி வரை பாசன காலம் முழுமைக்கும் தண்ணீர் திறக்கப்படவில்லை. இருப்பு வைத்திருந்த நீரை பெயரளவிலேயே திறந்ததால் நவரை நெல் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபடவில்லை. தற்போது ஓரளவு அணையில் நீர்இருப்பு உள்ளதால் தடையின்றி நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நவரை நெல் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். கிட்டத்தட்ட 3 ஆண்டு

இடைவெளிக்கு பிறகு நவரை சீசனில் நெல் சாகுபடி நடைபெறுகிறது. வழக்கமாக கீழ்பவானி பாசனப்பகுதியில் சம்பா சாகுபடி சீசனில் கர்நாடகா பொன்னி, ஆந்திரா பொன்னி, ஏடிடீ-36, பவானி, கோ-46 ரகங்களே சாகுபடி செய்யப்படும். இவற்றின் அறுவடை காலம் 135 நாட்கள் ஆகும். தற்போது நவரை பாசன காலத்தின் போது அதிசய பொன்னி, இட்லி குண்டு, ஏடிடீ-36 ஆகிய குறுகிய கால நெல்ரகங்களையே விவசாயிகள் சாகுபடி செய்வார்கள். இந்த குறுகிய கால நெல் ரகங்கள் 100 நாட்களில் விளைச்சலுக்கு வந்து விடும். தண்ணீரும் ஓரளவு இருந்தாலே போதுமானது. சம்பா சாகுபடியை ஒப்பிடும் போது நவரை சீசனில் நெல் சாகுபடி பரப்பு குறைந்தளவி லேயே இருக்கும். இருப்பினும், 3 ஆண்டுக்கு பிறகு ஓரளவு பாசனத்துக்கு தண்ணீர் கிடைப்பதால் மீண்டும் வேளாண் பணிகள் சுறுசுறுப்பாக உள்ளது. இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

**கோழிகளுக்கு இன்று தடுப்பூசி முகாம்**

கோவை, : ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதம் கால்நடைத்துறை சார்பில் கோழிக்கழிச்சல் நோய்க்கான தடுப்பூசி மாநிலம் முழுவதும் போடப்படுகிறது. கடந்த ஆண்டு இந்நோய்க்கு எதிராக 256.57 லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. இந்த ஆண்டிற்கான தடுப்பூசி முகாம் இன்று (9ம்தேதி) முதல் நடக்கிறது. கோவை மாவட்டத்தில் இன்று முதல் வரும் 22ம் தேதி வரை தடுப்பூசிகள் போடப்படவுள்ளது. இதற்கு ராணி பேட்டை கால்நடைநோய் தடுப்பு நிலையத்தில் இருந்து 75 ஆயிரம் டோஸ் மருந்துகள் கோவைக்கு வந்துள்ளது. இவை கால்நடை மருத்துவ மனைகள், 24 ஊரக கால்நடை மருந்தகங்கள், 12 பெரு மருத்துவ மனைகள் மற்றும் 22 கிளைகள், ஒரு பன்முக கால்நடை மருத்துவ மனைகள் மூலமாகவும் போடப்படவுள்ளது.

## 15 இடங்களில் நேரடி கொள்முதல் நிலையம் குவிண்டாலுக்கு எவ்வளவு?....

சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1410 மற்றும் ஊக்கத் தொகை ரூ.60ம் சேர்த்து ரூ.1,470 வழங்கப்படுகிறது. பொதுரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,360 மற்றும் ஊக்கத்தொகை ரூ.50ம் சேர்த்து ரூ.1,410 வழங்கப்படுகிறது. கொள்முதலுக்கான தொகையை விவசாயிகள் அவரவர்களின் விருப்பத்திற்கேற்ப ரொக்கமாவோ அல்லது அவர் களுடைய வங்கி கணக்கு மூலமாகவும் வழங்கப்பட உள்ளது. திருச்சி: ஸ்ரீரங்கம் இடத்தேர்தலை காரணம் காட்டி, திருச்சி மாவட் டத்தில் அரசு நேரடி கொள் முதல் நிலையங்கள் திறக் கப் படாமல் இருந்தது. இது தொடர்பாக தினகரன் செய்தி எதிரொலியால் 15 இடங்களில் அரசு நேரடி நெல்கொள்முதல் நிலையம் இன்று முதல் திறக்கப்பட உள்ளன. தமிழகம் முழுவதும் குறுவைக்கு அக்டோ பரி லும், சம்பாவுக்கு ஜனவரியி லும் நேரடி நெல் கொள் முதல் நிலையங்கள் திறக் கப்படுவது வழக்கம். இதே போல் இந்தாண்டும் ஜனவ ரியில் அந்தந்த மாவட்டங் களில் சம்பாவுக்கு நேரடி நெல்கொள்முதல் நிலையங் கள் திறக்க தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் ஏற்பாடு செய்திருந்தது. திருச்சி மாவட்டத்தை தவிர மற்ற மாவட்டங்களில் அரசு நேரடி நெல்கொள் முதல் நிலையங்கள் திறக்கப் பட்டு செயல்பட்டு வருகி றது. ஆனால் திருச்சி மாவட்டத்தில் மட்டும் ஸ்ரீரங்கம் இடைத்தேர் தலை காரணம் காட்டி நேரடி கொள் முதல் நிலையங் கள் திறக் கப்பட வில்லை என விவசாயிகள் குற்றம் சாட் டினர். லால்குடி, புள்ளம் பாடி, மண்ணச்சநல்லூர், அந்த நல்லூர், திருவெறும் பூர், மணி கண்டம், துறை யூர், உப்பிலியபுரம், முசிறி, தொட்டியம் ஆகிய வட்டா ரங்களில் 1லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி அறுவடை தீவிரமாக நடைபெற்று வரு வதாகவும், திருச்சி மாவட் டத்தில் இதுவரை 40 சத வீதம் அறுவடை பணிகள் முடிந்தும், மீதி அறுவடை இம் மாதம் கடை சிக் குள் முடியும் தரு

வாயில் உள்ளது.உள்ளாட்சி தேர்தலின் போது, தேர்தல் நடத்தை விதி முறை அமலில் இருந்ததால் திருச்சி மாவட் டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலை யங்கள் திறக்கப்படாமல் இருந்தது. அப்போதைய கலெக்டர் ஜெயஸ்ரீ, தேர்தல் ஆணை யத்திடம் சிறப்பு அனுமதி பெற்று கொள் முதல் நிலை யங்கள் திறக்க உதவியாக இருந்தார். தற்போது உள்ள கலெக்டரும் சிறப்பு அனு மதி பெற்று அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங் கள் திறக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து இருந்த னர். இது தொடர்பான விரிவான செய்தி தினகர னில் கடந்த 5ம்தேதி (வியா ழன்) பிரசுரமானது. திருச்சி மாவட்டத்தில் நேரடி கொள்முதல் நிலை யங்கள் திறப்பதற்கான சிறப்பு அனுமதி தலைமை தேர்தல் ஆணையரிடம் மாவட்ட நிர்வாகம் சார்பில் வாங்கப்பட்டது. இதை யடுத்து தொட்டியம், காட்டுப்புத்தூர், பெட்ட வாய்த்தலை, குழுமணி, நவலூர் கொட்டப்பட்டு, முத்தரசநல்லூர், நகர், பூவாளூர், லால்குடி, அன் பில், வெள்ளனூர், புஞ்சை செங்கேந்தி, பெருவள நல்லூர், குணசீலம், முசிறி ஆகிய 15 இடங்களில் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் இன்று முதல் திறக்கப்பட்டு செயல்பட உள்ளது.

## ஆடு, கோழிகளை அடைக்கும் மூங்கில் கூடை தயாரிப்பு பணி தீவிரம்

பெரம்பலூர், : செஞ்சேரி கிராமத்தில் ஆடு, கோழிகளை அடைக்கும் மூங்கில் கூடை தயாரிப்புப்பணி தீவிரமாக நடந்து வருகிறது. கிராமப் புறங்களில் வீடுகள் தோறும் ஆடு, மாடு, கோழி ஆகியவற்றை வளர்த்து வருவது வழக்கம். இதில் மாடுகளுக்குப் பட்டி அமைக்கும் பொதுமக்கள் ஆடுகளை, கோழிகளை வளர்க்க மட்டும் மூங்கில் கூடைகளையே பெரிதும் பயன்படுத்துவர். கடந்த சில ஆண்டுகளாக வீடுகளில் ஆடு, கோழிகளை வளர்க்கும் பழக்கம் குறைந்து வந்த சூழலில் அரசாங்கமே ஆடுகளை வளர்க்க இலவசமாக வெள்ளாடுகளை வழங்கியதால் மீண்டும் கிராமப்புறங்களில் ஆடு, கோழிகளை வளர்க்கும் பழக்கம் அதிகரித்துள் ளது. தற்போது பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், வேப்பந்

தட்டை, ஆலத் தூர், வேப்பூர் ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பொதுமக்களுக்கு 1,24,651 வெள்ளாடுகள், 39,407 செம்மறியாடுகள் கால்நடைத்துறை சார்பாக வழங்கப்பட்டுள் ளன. இத னால் அவற்றைப் பாதுகாக்கத் தேவையான மூங் கில் கூடைகளின் பயன்பாடு அதிகரித்தே வருகிறது. வெப்பம் தாக்காதபடிக்கு காற்றோட்ட வசதியும், ஆடுகள் நிற்கும் உயரத்திற்கு ஏற்றபடி 3 அடி உயரத்திற்கு மேல் இந்த மூங்கில் கூடைகள் இருப்பதாலும் நினை த்த இடத்திற்கு தூக்கிச்சென்று இடமாற்றம் செய்ய வசதி கொண்டதாகவும் இருப்பதால் இவற்றையே பொதுமக்கள் பெரிதும் விரும்பி வாங்குகின்றனர். பெரம்பலூர் அருகேயுள்ள செஞ்சேரி கிராமத்தில் இந்த மூங்கில் கூடைகள் தயா ரிக்கும் பணி பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. முறம், புட்டி, கூடைகளை மூங்கில் பட்டைகளைக் கொண்டு தயா ரிக்கும் பணி இங்கு தொன்றுதொட்டு நடந்து வருகிறது. குறிப்பாக பெரியசாமி, ராமர், சுந்தரம் உள்ளிட்டோர் இப்பணிகளை செய்து வருகின்றனர். சாதாரணமாக ஒரு மூங்கில் மரம் குறைந்தது ரூ.100க்கு விற்கப் படுவதாலும், ஆடுகளை அடைக்கும் ஒரு மூங்கில் கூடையைத் தயாரிக்க 10க்கும்மேற்பட்ட மூங்கில் மரங்கள் தேவைப்படுவதால் மூங்கில் கூடையொன்று ரூ.2500 முதல் ரூ.3 ஆயிரம் வரைக்கும் விலை வைத்து விற்கப்படுகிறது. இந்தக்கூடைகளில் ஆடுகளைப்போல, கோழிகளையும் அடைத்து வைத்து வளர்க் கலாம் என்பதால் பலரும் இதனை தேடிவந்து விரும்பி வாங்கிச் செல்லுகின்றனர்.

## <u>கடன் பெறாத விவசாயிகள் உளுந்து காப்பீடு செய்ய 15ம் தேதி கடைசி நாள்</u>

நாகை, : நாகை மாவட்டத்தில் உளுந்து, பச்சை பயறு பயிர் காப்பீடு செய்ய கடன் பெறாத விவசாயிகளுக்கு 15ம் தேதி கடைசி நாளாகும். நாகை மாவட்டத்தில் நடப்பாண்டில் நெல் தரிசில் சாகுபடி செய்யப்பட்டுள்ள உளுந்து, பச்சைபயறு பயிர்களுக்கு மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் நடைமுறைப் படுத்தப்படும் 2014-15 ராபி

பருவம் உளுந்து, பாசி பயறு பயிர்களுக்கான பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்ய பிரிமியத்தொகை செலுத்துவதற்கான காலக்கெடு பயிர்க்கடன் பெறும் விவசாயி களுக்கு வருகிற மார்ச் 31ம் தேதியும், கடன் பெறாத விவசாயிகளுக்கு வருகிற 15ம் தேதியாகும். உளுந்து பயிருக்கு ஏக்கருக்கு ரூ.5,427க்கு இன்சூரன்ஸ் செய்ய பிரிமிய தொகையாக ரூ.109 செலுத்த வேண்டும். இதில் அரசு 50 சதவீத தொகையை கடன் பெற்ற விவசாயிகளுக்கு மானியமாகவும், 55 சதவீத தொகையை கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாகவும் வழங்குகிறது. கடன் பெற்ற சிறு, குறு விவசாயிகள், இதர விவசாயிகள் மற்றும் கடன்பெறாத இதர விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.5,427க்கு இன்சூரன்ஸ் செய்ய பிரிமிய தொகையாக ரூ.54 செலுத்த வேண்டும். கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ஏக்கருக்கு பிரிமிய தொகையாக ரூ.49 செலுத்த வேண்டும். கூடுதலாக ஏக்கருக்கு ரூ.8140க்கு இன்சூரன்ஸ் செய்ய விரும்பும் விவசாயிகள் கூடுதலாக ரூ.977ஐ விருப்பத்தின்பேரில் செலுத்தலாம். பச்சை பயிர் ஏக்கருக்கு ரூ.4,853க்கு இன்சூரன்ஸ் செய்ய பிரிமிய தொகையாக ரூ.97 செலுத்த வேண்டும். இதில் அரசு 50 சதவீத தொகையை கடன் பெற்ற விவசாயிகளுக்கு மானியமாகவும், 55 சதவீத தொகையை கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாகவும் வழங்குகிறது. கடன் பெற்ற சிறு, குறு விவசாயிகள், இதர விவசாயிகள் மற்றும் கடன் பெறாத இதர விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.4,853க்கு இன்சூரன்ஸ் செய்ய பிரிமிய தொகையாக ரூ.49 செலுத்த வேண்டும். கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ஏக்கருக்கு பிரிமியத்தொகையாக ரூ.44 செலுத்த வேண்டும். கூடுதலாக ஏக்கருக்கு ரூ.7,280க்கு இன்சூரன்ஸ் செய்ய விரும்பும் விவசாயிகள் கூடுதல் பிரிமியமாக ரூ.1,019ஐ விருப்பத்தின்பேரில் செலுத்தலாம். பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் சிட்டா, அடங்கல், அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்று முன்மொழிவு

படிவத்துடன் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலோ அல்லது சேவை பகுதி வணிக வங்கிகளிலோ தங்களின் தங்கள் பிரிமிய தொகையை செலுத்தலாம். முன்மொழிவு படிவங்களை அருகில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலோ அல்லது வணிக வங்கி களிலோ பெற்று கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகளுக்கு வருகிற 15ம் தேதி பிரிமியம் செலுத்த கடைசி நாளாகும். எனவே நாகை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் விரைவில் பயிர் காப்பீடு செய்து பயன்பெற வேண்டும். இவ்வாறு கலெக்டர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கோடை வெயிலை சமாளிக்க தயாராகிறது சென்னை சோற்று கற்றாழை ஜூஸ் விற்பனை படு ‘ஜோர்’</u>**



சென்னை, கோடை வெயிலை சமாளிக்க தயாராகும் விதமாக சென்னையில் சோற்று கற்றாழை ஜூஸ் விற்பனை படு ஜோராக நடந்து வருகிறது.

கோடைக்காலம்

தமிழகத்தில் கோடைகாலம் இன்னும் ஒரு சில வாரங்களில் தொடங்க உள்ளது. தற்போது காலையில் பனிப்பொழிவின் தாக்கம் அதிகமாக இருந்தாலும், மதியம் வெயிலின் உக்கிரத்தை உணர முடிகிறது. இந்த நிலையில் உடல் சூட்டை தணிக்கக்கூடியதும், மருத்துவ குணங்களும் அடங்கப்பெற்ற சோற்று கற்றாழை ஜூஸ் விற்பனையும் மும்முரமாக நடந்து வருகிறது. உடல் சூட்டை தணிக்க சோற்று கற்றாழை ஜூஸ் இருக்கும் கடைகளை மக்கள் நாடி செல்ல ஆரம்பித்து வருகிறார்கள். இதனால் சாலைகளில் ஆங்காங்கே புற்றீசல் போல சோற்று கற்றாழை

ஜூஸ் கடைகள் முளைக்க தொடங்கி இருக்கின்றன. கற்றாழைஜூஸ்

சென்னை மெரினா கடற்கரையில் தினந்தோறும் நடைபயணம் மேற்கொள்பவர்கள் சோற்று கற்றாழை ஜூஸ் எங்கே இருக்கிறது என்று தேடிச்சென்று குடிக்கின்றனர். இதனால் மெரினா கடற்கரையில் தினந்தோறும் சோற்று கற்றாழை ஜூஸ் விற்பனை ஜோராக நடந்து வருகிறது. நடைபயணம் மேற்கொள்பவர்கள் மட்டுமல்லாது பொதுமக்களும் தினமும் காலையில் தேடிவந்து சோற்று கற்றாழை ஜூஸ் வாங்கி சாப்பிடுகிறார்கள். உடல் சூட்டை தணிப்பதாகவும், உடலுக்கு அருமருந்தாகவும் உள்ள கற்றாழை ஜூஸ் ஒரு கப் ரூ.20-க்கு இங்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து மெரினாவில் உள்ள சோற்று கற்றாழை ஜூஸ் விற்பனையாளர் பரசுராமன் கூறியதாவது:- சர்க்கரை நோயாளிகள் சாப்பிடலாம். சோற்று கற்றாழை மடல்களை பிளந்து நுங்கு போல உள்ள சதைப்பகுதியை சிறு, சிறு துண்டுகளாக வெட்டி நல்ல தண்ணீரில் 7 முறை நன்றாக கழுவி விடுவோம். அப்படி செய்வதின் மூலம் கற்றாழையின் கசப்புத்தன்மை குறைந்துவிடும். பின்னர் அதை மோர் அல்லது தயிருடன் கலந்து விற்பனை செய்கிறோம். மூலம், பித்தம், வாய்வு, வயிற்றுவலி, வயிற்றுப்புண், கண் எரிச்சல், ரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய்களுக்கு சிறந்த மருந்தாகும். சர்க்கரை நோயாளிகள் தாராளமாக இதை பருகலாம். பெண்கள் கண்டிப்பாக சாப்பிட வேண்டிய பானமாகும். தினந்தோறும் காலை நடைபயிற்சி மேற்கொள்பவர்கள் ஆர்வத்துடன் கற்றாழை ஜூஸ் குடித்து செல்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார். தர்பூசணி-இளநீர் கடைகள் மற்ற குளிர்ச்சியூட்டும் பொருட்களான தர்பூசணி, இளநீர், வெள்ளரிக்காய் வரத்தும் அதிகரித்து இருக்கிறது. சென்னை நகரில் ஆங்காங்கே தர்பூசணி மற்றும் இளநீர் கடைகள் முளைக்க தொடங்கி இருக்கின்றன. பழச்சாறு கடைகளிலும் பகல் நேரத்தில் கூட்டத்தை பார்க்க முடிகிறது.

இதனால் கோடை காலத்தை சமாளிக்க சென்னை நகரம் தயாராகி வருவதை அறிய முடிகிறது.